**இலங்கை கலைக் கழகம் - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கலைக் கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கழகத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2. இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| குறிப்பிட்ட நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 15 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் வரவு செலவுத் திட்டப் பதிவேட்டின் பெறுமதி மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கிடையே இணக்கமொன்று மற்றும் அப்பெறுமதிகளுக்கிடையேயான கிசமான அளவு வேறுபாட்டிற்கான காரணத்தை தெளிவுபடுத்தலானது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காளரின் ஆலோசனையைப் பெற்ற பின்னர் குறிப்பிட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | நியமங்களின் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழகத்தின் அலுவலகச் சுற்றாடலுக்காக ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே நகர சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,380,015 ஆனது மீளப் பெறத்தக்க வைப்புச் செலவில் கணக்கிடப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அந்த அளவினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | 2021 நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | வெளியீடுகள் இருப்பு | 438,730 | கணிப்பீட்டு மற்றும் மதிப்பீட்டு அறிக்கை | 2021 ஆம் வருடத்தின் பொருட் கணிப்பீடு குறிப்பிட்ட தினத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | குறிப்பிட்டதன் பிரகாரம் பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மதியரைக் குழு கூட்ட | - | மதியுரைக் குழுவின் 11 ஆம் | மதியுரைக் குழுக் கூட்ட அறிக்கை குழுவின் | தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் |

| | | | |
|---|---|---|---|
| அறிக்கை | கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் பெறப்பட்ட ஆலோசனைகள் அடங்கிய கூட்ட அறிக்கை | செயலாளர் மற்றும் உதவிச் செயலாளரிடமிருந்து பெறப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சமர்ப்பிக்ககப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிபிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 381(1) | நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 756 | பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அலுவலக வளாகம் மற்றும் அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டமையால் இடை நடுவில் குவிந்து கிடப்பதால் பொருட் கணிப்பீடு மேற்கொள்ள முடியாதிருந்தது. 2021 ஆம் வருடத்திற்காக குறிப்பிட்ட பிரகாரம் பொருட் கணிப்பீடு மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்டதன் பிரகாரம் பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 4.2.6 ஆம் பந்தி | நேரடி அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு காலாண்டு செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்படவில்லை. | குறிப்பிட்ட அறிக்கை சரியாக சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 5.2.5 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சரியாக சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | சரியாக பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயல் நடவடிக்கைத் திட்டம் வருடாந்தம் தயாரிக்கப்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 737,820 ஆன பற்றாக்குறை என்பதுடன் அதற்கு மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,917,377 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,655,197 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு ஒதுக்கங்கள் குறைவாகப் பெறப்பட்டமை மற்றும் நிர்வாகம் மற்றும் நிறுவனத்தின் செலவுகள் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்னமைகள்.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலை மதியுரைக் கழகம் மற்றும் கலாச்சார முகவர்களின் சர்வதேச கூட்டமைப்பின் (International Federation of Arts Councils and Culture Agencies) உறுப்புரிமை 2019 – 2021 காலப்பகுதிக்காக புதுப்பிப்பதற்காக வருடத்திற்கு 700 அவுஸ்திரேலிய டொலர் வீதம் 03 வருடங்களுக்கு 2100 டொலர் செலுத்தப்பட வேண்டி இருந்த | IFACCA சர்வதேச கலைச் சங்கத்தின் 2019 இலிருந்து 2021 வருடம் வரையான 03 வருடங்களுக்காக உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்காக சங்கத்தினால் அனுப்பபட்ட பட்டியலின் பிரகாரம் 2019 – 2021 ஆம் வருடங்களில் உறுப்புரிமைக் கட்டணம் 2700 அவுஸ்திரேலிய | மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 80,413 ஐ அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும் அதற்காக 2700 அவுஸ்திரேலிய டொலர் குறிப்பிட்ட நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 600 அவுஸ்திரேலிய டொலர் அதாவது ரூபா 80,413 ஆனது அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | டொலர் ஆகும். பட்டியலுடன் அனுப்பபட்டிருந்த கடிதத்தில் வருடத்திற்கான 100 அவுஸ்திரேலிய டொலர் மட்டும் உறுப்பினர் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டதில் கவனம் செலுத்தாது இருந்தமை எமது தரப்பில் ஏற்பட்ட தவறாகும். அக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட முரண்பாடுகள் தொடர்பாக சங்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரால் குறிப்பிடப்பட்டுள்ளமை கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர் கட்டணத்தில் அதிகரிப்பு தங்கள் அலுவலகத்தில் உள்ள அதிகாரி ஒருவரின் தவறு காரணமாக இருந்ததாகவும் இது தொடர்பாக உத்தியோகபூர்வ மட்டத்தில் கடிதமொன்று வெளியிடப்பட்டதாகவும் தெரிவித்தார். பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த எம்மால் செலுத்தப்பட்ட பணம் சரியானது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எவ்வகையிலும் அதிக கட்டணம் செலுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | |

**3.2 பெறுகை முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலைச் சஞ்சிகையின் 500 பிரதிகள் மற்றும் ஏனைய 27000 கலைத் தொகுப்புக்களை அச்சிடுவதற்காக முறையே ரூபா 78,840 மற்றும் ரூபா 981,218 ஆன ஒப்பந்தம் தனியார் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்ட போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.அதில் பெறுகை வழிகாட்டி இலக்கம் 5.4.4 இற்கு முரணாக ஒப்பந்தத் தொகையில் நூற்றுக்கு 75 வீதம் அதாவது முறையே ரூபா 59,130 | எதிர்காலத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு மற்றும் முற்பண பாதுகாப்பு பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். முற்பணக் கொடுப்பனவு செலுத்தப்பட்ட திகதிக்குள் அனைத்து வகையான வெளியீடுகளுக்குமான அனைத்து மாதிரிகளும் | பெறுகை வழிகாட்டிக்கு இணங்கியதாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் ரூபா 735,913 என்பன முற்பணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் முற்பண பாதுகாப்பு எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டு இறுதி அச்சிடலுக்கான அங்கீகாரம் பெறப்படுவதற்காக எமது நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக 75% ஆன முற்பணமொன்று செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்.

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் முடிவுறற வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறிப்பிட்ட தினத்தில் சமர்ப்பிக்கப்படும். | குறிபபிட்ட தினத்தில் அறிக்கை சமர்பபிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |